

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 22.03.2025 | ஈரோடு மத்திய | பவானி | நால்ரோடு அருகில், ஆப்பக்கூடல் | **சி.வி.எம்.பி.எழிலரசன்** எம்.எல்.ஏ., வி.நிக்கிதா |
| 2 | 22.03.2025 | திண்டுக்கல் கிழக்கு | பழனி | பண்ணைக்காடு | முனைவர் **இரா.தி.சபாபதி மோகன்,** ஷாலினி |
| 3 | 22.03.2025 | மதுரை தெற்கு | திருமங்கலம் | கள்ளிக்குடி சத்திரம் | **திருச்சி சிவா** எம்.பி., இ.நாகூர் கனி |
| 4 | 22.03.2025 | இராமநாதபுரம் | பரமக்குடி | காந்தி சிலை அருகில், பரமக்குடி. | இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., பீ.நிலோஃபர் நிஷா |
| 5 | 22.03.2025 | தூத்துக்குடி தெற்கு | திருச்செந்தூர் | பேரூராட்சி அலுவலகம் அருகில், ஆத்தூர் | **பொன்.முத்துராமலிங்கம்,** கார்த்திக் |
| 6 | 22.03.2025 | கோவை மாநகர் | கோவை வடக்கு | 6–வது வீதி திடல், சாய்பாபா காலனி, கே.கே.புதூர் | பொள்ளாச்சி சித்திக், கவிஸ்ரீ |
| 7 | 22.03.2025 | கரூர் மாவட்டம் | கரூர் | பசுபதிப்பாளையம் | சூர்யா சேவியர், சண்முகவள்ளி |
| 8 | 22.03.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | தளி | கெலமங்கலம் | எழுத்தாளர் வே.மதிமாறன், செ.பவண்யா |
| 9 | 22.03.2025 | இராணிப்பேட்டை | சோளிங்கர் | பூங்கா அருகில், காவேரிப்பாக்கம் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, த.கங்கா |
| 10 | 22.03.2025 | கள்ளக்குறிச்சி வடக்கு | உளுந்தூர்பேட்டை | ஊராட்சி அலுவலகம் அருகில், சிறுபாக்கம் | **கம்பம் செல்வேந்திரன்,** எஸ்.யமுனா |
| 11 | 22.03.2025 | தஞ்சாவூர் மத்திய | ஒரத்தநாடு | பாப்பாநாடு | தி.செந்தில் வேல், கபில் சாய் |
| 12 | 22.03.2025 | புதுக்கோட்டை தெற்கு | திருமயம் | சீரணி கலையரங்கம், திருமயம் | ராஜகம்பீரன் அப்பாஸ், பிரீத்தி |
| 13 | 22.03.2025 | திருவாரூர் | திருவாரூர் | கலைஞர் திடல், கூடூர் | பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்தரன், தினேஷ் பாபு |
| 14 | 23.03.2025 | திருவாரூர் | திருத்துறைப்பூண்டி | கலைஞர் திடல், மடப்புரம் | மதுரை எஸ்.பாலா, ஜெ.விக்னேஷ்வரி |
| 15 | 23.03.2025 | மதுரை மாநகர் | மதுரை வடக்கு | அண்ணா நகர், மதுரை | மாண்புமிகு **கோவி செழியன்,** ஞா.கதிரவன் |
| 16 | 23.03.2025 | தூத்துக்குடி தெற்கு | ஒட்டப்பிடாரம் | கடை வீதி, புதுக்கோட்டை | சூர்யா சேவியர், சண்முகநாராயணன் |
| 17 | 23.03.2025 | கோவை வடக்கு | மேட்டுப்பாளையம் | சிக்காரம்பாளையம், காரமடை மேற்கு ஒன்றியம் | இந்திரகுமார் தேரடி, குமுதஸ்ரீ |
| 18 | 23.03.2025 | சேலம் மேற்கு | எடப்பாடி | பேருந்து நிலையம் அருகில், எடப்பாடி | **சி.வி.எம்.பி.எழிலரசன்** எம்.எல்.ஏ., ஜோ.வியானி விஷ்வா |
| 19 | 23.03.2025 | திருப்பத்தூர் | வாணியம்பாடி | கோவிந்தபுரம் | ராஜகம்பீரன் அப்பாஸ், ரூ.கீர்த்தனா |
| 20 | 23.03.2025 | காஞ்சிபுரம் வடக்கு | திருப்பெரும்புதூர் | பஜார் வீதி, சுங்குவார்சத்திரம் | மருத்துவர். எஸ்.ஏ.எஸ்.ஹஃபீசுல்லா, க.பார்கவி |
| 21 | 23.03.2025 | கள்ளக்குறிச்சி வடக்கு | சங்கராபுரம் | ஊராட்சி அலுவலகம் அருகில், சோழம்பட்டு | சௌம்யன் வைத்தியநாதன், க.இன்பத்தமிழன் |
| 22 | 23.03.2025 | கடலூர் மேற்கு | நெய்வேலி | என்.எல்.சி ஆர்ச் கேட் எதிரில், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம் | மில்டன், ஷே.ஷிபானா மரியம் பீவி |
| 23 | 23.03.2025 | கடலூர் மேற்கு | பண்ருட்டி | இந்திரா காந்தி சாலை, பேருந்து நிலையம் பின்புறம் | மருத்துவர் ப.மீ.யாழினி, க.முல்லைவேந்தன் |
| 24 | 23.03.2025 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | பெரியார் திடல், மேலக்கோட்டை வாசல், நாகப்பட்டினம் | செந்தில் வேல், சு.சுகநிலவன் |
| 25 | 24.03.2025 | தஞ்சாவூர் வடக்கு | பாபநாசம் | அண்ணா சிலை அருகில், பசுபதிக்கோயில் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, பூர்ணிமா |
| 26 | 25.03.2025 | தஞ்சாவூர் தெற்கு | பட்டுக்கோட்டை | மதுக்கூர் பேருந்து நிலையம், பட்டுக்கோட்டை | துரை சம்பத், பார்வின் |
| 27 | 25.03.3025 | சென்னை கிழக்கு | துறைமுகம் | ரமணன் தெரு, யானைக்கவுனி | மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மு.மு.முஸ்தக் |
| 28 | 25.03.3025 | சென்னை கிழக்கு | வில்லிவாக்கம் | ஜாயின்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், நரேன் கௌதம் |

**அன்பகம்,** சென்னை – 18.

நாள் : 19–03–2025.

**உதயநிதி ஸ்டாலின்**

செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி